## மார்ச் - 20 - செவ்வாய்
### தூய கத்பெர்ட்
### என் வாழ்நாள்கள் புகையென மறைகின்றன: திபா. 102:3

**முதல் வாசகம் : எண்ணாகமம் 21 : 4 – 9**

ஏதாம் நாட்டைச் சுற்றிப்போகும்படி ஓர் என்ற மலையிலிருந்து அவர்கள் "செங்கடல் சாலை" வழியாகப் பயணப்பட்டனர் அவ்வழியை முன்னிட்டு மக்கள் பொறுமையிழந்தனர். மக்கள் கடவுளுக்கும் மோசேக்கும் எதிராகப் பேசினர் "இந்தப் பாலைநிலத்தில் மாளும்படி எங்களை எகிப்திலிருந்து கொண்டு வந்தது ஏன்? இங்கு உணவுமில்லை, தண்ணீருமில்லை, அற்பமான இந்த உணவு எங்களுக்கு வெறுத்துப் போய்விட்டது" என்றனர். உடனே ஆண்டவர் கொள்ளி வாய்ப் பாம்புகளை மக்களிடையே அனுப்பினார் அவை கடிக்கவே இஸ்ரயேல் மக்களில் பலர் மாண்டனர். அப்போது மக்கள் மோசேயிடம் வந்து, "நாங்கள் பாவம் செய்துள்ளோம்" நாங்கள் ஆண்டவருக்கும் உமக்கும் எதிராகப் பேசியுள்ளோம் அவர் இந்தப் பாம்புகளை அகற்றி விடும்படி நீர் ஆண்டவரிடம் வேண்டிக் கொள்ளும்" என்றனர். அவ்வாறே மோசே மக்களுக்காக மன்றாடினார். அப்போது ஆண்டவர் மோசேயிடம், "கொள்ளி வாய்ப் பாம்பொன்றைச் செய்து அதை ஒரு கம்பத்தில் பொருத்து கடிக்கப்பட்டோரில் இதைப் பார்க்கிற ஒவ்வொருவனும் பிழைப்பான்" என்றார். அவ்வாறே மோசே ஒரு வெண்கலப் பாம்பைச் செய்து அதை ஒரு கம்பத்தில் பொருத்தினார் பாம்பு கடித்த எந்த ஒரு மனிதனும் இந்த வெண்கலப் பாம்பைப் பார்த்து உயிர் பிழைப்பான்.

**பதில்பாடல் :** ஆண்டவரே என் மன்றாட்டைக் கேட்டருளும்

**நற்செய்தி : யோவான் 8 : 21 – 30**

அக்காலத்தில் இயேசு பலிசேயர்களை நோக்கி, "நான் போன பின் நீங்கள் என்னைத் தேடுவீர்கள். நான் போகுமிடத்திற்கு உங்களால் வர இயலாது. நீங்கள் பாவிகளாகவே சாவீர்கள்" என்றார். யூதர்கள், ""நான் போகுமிடத்திற்கு உங்களால் வர இயலாது" என்று சொல்கிறாரே, ஒருவேளை தற்கொலை செய்து கொள்ளப் போகிறாரோ?" என்று பேசிக்கொண்டார்கள். இயேசு அவர்களிடம், "நீங்கள் கீழிருந்து வந்தவர்கள் நான் மேலிருந்து வந்தவன். நீங்கள் இவ்வுலகைச் சார்ந்தவர்கள். ஆனால் நான் இவ்வுலகைச் சார்ந்தவன் அல்ல. ஆகவேதான் நீங்கள் பாவிகளாகவே சாவீர்கள் என்று உங்களிடம் சொன்னேன். "இருக்கிறவர் நானே" என்பதை நீங்கள் நம்பாவிடில் நீங்கள் பாவிகளாய்ச் சாவீர்கள்" என்றார். அவர்கள், "நீர் யார்?" என்று அவரிடம் கேட்டார்கள். அவர், "நான் யாரென்று தொடக்கத்தி லிருந்தே சொல்லி வந்துள்ளேன். உங்களைப் பற்றிப் பேசுவதற்கும் தீர்ப்பிடுவதற்கும் பல உண்டு. ஆனால் என்னை அனுப்பியவர் உண்மையானவர். நானும் அவரிடமிருந்து கேட்டவற்றையே உலகுக்கு எடுத்துரைக்கிறேன்" என்றார். தந்தையைப்பற்றியே அவர் பேசினார் என்பதை அவர்கள் உணர்ந்து கொள்ளவில்லை. இயேசு அவர்களிடம், "நீங்கள் மானிட மகனை உயர்த்திய பின்பு, "இருக்கிறவர் நானே" நானாக எதையும் செய்வதில்லை மாறாகத் தந்தை கற்றுத் தந்ததையே நான் எடுத்துரைக்கிறேன் என்பதை அறிந்து கொள்வீர்கள். என்னை அனுப்பியவர் என்னோடு இருக்கிறார். அவர் என்னைத் தனியாக விட்டுவிடுவதில்லை. நானும் அவருக்கு உகந்தவற்றையே எப்போதும் செய்கிறேன்" என்றார். அவர் இவற்றைச் சொன்னபோது பலர் அவரிடம் நம்பிக்கை கொண்டனர்.

**தியானம்:** யோவா:1:1 தொடக்கத்தில் வாக்கு இருந்தது. அவ்வாக்கு கடவுளோடு இருந்தது. அவ்வாக்கு கடவுளாயும் இருந்தது. அனைத்தும் அவரால் உண்டாயின. உண்டானது எதுவும் அவரால் அன்றி உண்டாகவில்லை. இன்றைய நற்செய்தியில் "இருக்கின்றவர் நானே "என்பதை நம்பாவிடில் நீங்கள் பாவிகளாய் சாவீர்கள்" என்றார். இருக்கின்ற இறைவனை எம் வாழ்வில் எப்படி விசுவாசித்து உணருகின்றோம் என்பதை சிந்தித்து பார்ப்போம். விசுவாசம் என்பது இறைவன் எமக்கு கொடுத்திருக்கும் ஒரு மாபெரும் கொடை. ஆனால் இக்காலத்தில் பெரும்பாலானாரிடம் விசுவாசம் குறைந்து, சிலரிடம் அற்றுப்போகும் ஒரு பயங்கர நிலை உருவாகியிருக்கிறது. புனித தோமாவிடம் இயேசு கூறுகின்றார் நீ கண்டதனால் விசுவாசிக்கின்றாய் ஆனால் காணாமல் விசுவாசிப்பவர் பேறுபெற்றவர். இன்னம் ஆண்டவரிடம் சீடர்கள் கூறுகின்றார்கள் எங்கள் விசுவாசத்தை அதிகமாக்கியருளும் என்று, சில வேளைகளில் நாம் எதிர்பார்த்தவை நடக்காவிட்டால், எமது வேண்டுதல்கள் நிறைவேறாவிட்டால் இறைவனில் நாம் நம்பிக்கை இழந்து சோர்ந்து போய்விடுகின்றோம் யோவா:8:29. என்னை அனுப்பியவர் என்னோடு இருக்கின்றார் என்னைத்தனியாக விட்டுவிடுவதில்லை. நானும் அவருக்கு உகந்தவற்றையே எப்போதும் செய்கின்றேன் "என்றார். எப்போதும் ஆண்டவர் எம்முடன் இருக்கின்றார் என்ற உணர்வுடன் கூடிய நம்பிக்கை எம்மில் இறைவார்த்தைகள், மறையுரைகள், மூலம் எமக்கு உணர்த்தப்படுக்கொண்டே இருக்கின்றது. இதை நாம் உணர்ந்து இறைவனில் முழு நம்பிக்கை வைத்து வாழும் போது விசுவாச ஒளி பெற்ற மக்களாக இறைவனுக்கு உகந்தவற்றை செய்து வாழ்வோம்.